Registered as a NewsPaper

விலை ரூபா 10.00


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-07 | 23-08-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-187


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)





லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவின் களமுனை ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தமிழீழத்தேசியத்தலைவர் அவர்கள் மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதையும், அந் நிகழ்வில் பரிசிலையும் சான்றிதழையும் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவின்

# களமுனை ஆசிரியர்களின் பயிற்சி நெறி நிறைவு நிகழ்வில் தேசியத்தலைவர் பங்கேற்பு!

## சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கினார்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் களமுனை ஆசிரியர் களுக்கான பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் அவர்கள் பங்கு கொண்டு சிறப்பித் துள்ளார். ராஜன் கல்விப்பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பயிற்சி நெறியை நிறைவு செய்த போராளிகளுக்கான சான்றிதழ்களும், பல்வேறு துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பரிசில்களும் தேசியத் தலைவரால் வழங்கப்பட்டன.**

அத்துடன் இப் பிரிவில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் கருத்துரையாற்றிய தேசியத் தலைவர் அவர்கள், களமுனை ஆசிரியர்களின் பணியின் முக்கியத்துவம் பற்றியும், குறித்த ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏனைய பணிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், வடமுனைக் கட்டளைத்தளபதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாரவூர்தி -ஈருருளி விபத்து ஈருருளியில் பயணித்தவர் மரணம்

### -பாரவூர்தியும் சாரதியும் காவல்துறையால் தடுத்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஈருருளியில் பயணித்த வயோதிபரை பாரவூர்தி மோதியதில் பாரவூர்தியின் சக்கரத்தினுள் சிக்கிபடுகாயமடைந்த வயோதிபர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கையில் மரணமானார். மேற்படி சம்பவம் நேற்றுகாலை 9.00 மணிக்கு ஏ-9வீதியில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த பாரவூர்தியானது முன்னால் சென்ற வாகனத்தினை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும் வரும் வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்று தீர்ப்பளிக்கும்

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்படவேண்டும் என்பது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என சிறிலங்காவின் உச்சநீதிமன்ற நீதிபதி நேற்று அறிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சார்பில் வாதிட்ட சட்டத்தரணி 2006 ஆம் ஆண்டிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் சனாதிபதியின் பதவிக்காலம் அந்த ஆண்டிலேயே முடிவடைகின்றது என்றும் வாதிட்டிருந்தார்.

ஆனாலும் எதிர்த்தரப்பினர் சனாதிபதியின் பதவிப்பிரமாணத்தின் படி இந்த ஆண்டு இறுதிக்குள் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வாதிட்டிருந்தனர்.

தீவிரவாத பௌத்தபிக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## - மன்னார் பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் -

## கடற்படையினரால் சுற்றிவளைப்பு; 13 மாணவிகள் 2 ஊழியர்கள் கைது!

(மன்னார்)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் மன்னார், பேசாலை பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றுவந்த 13 மாணவிகளை சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக்கைது செய்துள்ளனர்.

யூ.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டுவந்த இந்தப்பயிற்சியில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் உழைப்பாளர்களை இழந்த பெண்களுமே பயிற்சிபெற்றுவந்தனர்.

நேற்றுக்காலை இந்தப்பயிற்சி நடைபெற்றுவந்த இடத்தைச்சுற்றிவளைத்த கடற்படையினர் அங்கு பயிற்சி பெற்றுவந்த பதின்மூன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பாவில் புலிகள் மீதான தடைமுயற்சிக்கு நோர்வே ஆட்சேபம்

ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப்புலிகளை தடைசெய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளை நோர்வே அனுசரணையாளர்கள் கடுமையாக ஆட்சேபித்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலையை அடுத்து அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் விடுதலைப்புலிகளை தடைசெய்வதற்கான இராஜதந்திர முன்னெடுப்புக்களை சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது.

"ஏற்கனவே சமாதான முன்னெடுப்புக்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் நிலையில் விடுதலைப்புலிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ ஆட்பதிவு திணைக்கள பணிகள் தொடங்க ஏற்பாடு

### - முதற்கட்டமாக தேசிய அடையாள அட்டைகள் விநியோகம்

தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனைக் கமைய தமிழீழஆட்பதிவுத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்பணியாக தமிழீழதேசிய அடையாள அட்டையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வாழ்விடமாகக் கொண்ட மக்களிற்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பதினாறு அகவை பூர்த்தி செய்த அனைத்து மக்களும் தமிழீழ தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தமிழீழ தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வது தொடர்பான விபரங்கள் 15-09-2005 இன் பின்னர் பத்திரிகை செய்தியாகவும், தங்களுக்கு அருகிலுள்ள போக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்தேசிய எழுச்சிநாள் தொடர்பான விசேட கலந்துரையாடல்கள்

எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் தமிழ் தேசிய எழுச்சி நாள் தொடர்பான விசேட கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

இன்று காலை 10.00 மணிக்கு கிளி/ மத்திய கல்லூரியிலும்,மாலை 02.00 மணிக்கு கிளி/ அக்கராயன் ம.வியிலும், காலை 10.00 மணிக்கு கிளி/பளை மத்திய கல்லூரியிலும், நாளை காலை 10.00 மணிக்கு கிளி/வட்டக்கச்சி ம.வியிலும், மாலை 2.00 மணிக்கு கிளி/தருமபுரம் ம.வியிலும், நாளை மறுதினம் காலை 10.00 மணிக்கு கிளி/பூநகரி ம.வியிலும், மாலை 2.00 மணிக்கு கிளி/வட்டக்கச்சி ம.வியிலும் கலந்துரையாடல்கள் நடைபெறும். (சோ)

## சாவு அறிவித்தல்

### கிறிஸ்தோ யாக்கோப்பிள்ளை

விடத்தல்தீவைச் சேர்ந்த கிறிஸ்தோ யாக்கோப்பிள்ளை (22.08.2005) நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற செபமாலையின் அன்புக் கணவரும், யாக்கோவா (கனடா), மரிய கிறிஸ்ரி, புலோமினா, அடைக்கலமுத்து (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), எற்போழியா, மதுரநாயகம், மேரிமலர், றொபேட் சாள்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரான்சிஸ் (கனடா), இராயப்பு (இளைப்பாறிய அதிபர்),சந்தியாப் பிள்ளை, மேரிகிறேஸ் காலஞ்சென்ற திருச்செல்வம், குணசீலி, தருமராசா (லண்டன்), மேரி ஜெசிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (23.08.2005) இன்று மாலை 3.00 மணிக்கு விடத்தல்தீவு சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


குறிப்பு:-

2003.01.04 ஆம் திகதி 100 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியவர் ஆவார்.

தகவல்:-
மகன்,
றொபேட்சாள்ஸ்

(சி.12579)

## சாவு அறிவித்தல்



### நல்லதம்பி விஜயேந்திரன்

வள்ளிபுனத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி விஜயேந்திரன் அவர்கள் (அஜித் மி... வள்ளிபுனம்) 21.08.2005 அன்று அகாலச் சாவடைந் துள்ளார்.

அன்னார் நல்லதம்பி, தேவமனோகரியின் அருமைப் புதல்வனும், நகுலேந்திரன், ரவீந்திரன், இராஜமனோகரி, கௌரிமனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரசாந், அஜந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீ இந்திரஜித்தின் சிறிய தந்தையும், உதயகுமார், காலம் சென்ற சுபாசினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வள்ளிபுனம் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் வள்ளிபுனம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அஜித் மினி,
பிரதான வீதி,
வள்ளிபுனம்,

தகவல்:-
தாய், சகோதரர்கள்

(6603)

---

மாவீரன் பண்டார வன்னியனின்

## 202 ஆம் ஆண்டு நிறைவு வெற்றிவிழா

## சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடு

(ஓட்டுசுட்டான்)

வன்னி மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 202 ஆம் ஆண்டு நினைவு நிறைவு வெற்றிவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் இடம் பெறவுள்ளன.

மாலை 4.00 மணிக்கு கற்சிலை மடுவில் அமைந்துள்ள பண்டார வன்னியன் உருவச்சிலை வளாகத்தில் நிகழ்வுகள் இடம் பெறும். இந் நிகழ்வுகளுக்கு முல்லை மாவட்ட அரச அதிபரும் பண்டார வன்னியன் அறங்காவற்சபைத் தலைவருமான இமெல்டா சுகுமார் தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரட்ணம் கலந்து கொள்வார்.

எழுச்சி ஊர்வலம் மாலை 4.00 மணிக்கு மாவீரன் பண்டார வன்னியனின் கற்பொறிப்பு வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி உருவச்சிலை வளாகத்தில் நிறைவு பெறும்.

மாவீரன் பண்டார வன்னியனின் உருவப்படம் தாங்கி ஊர்வலம் நகர காவடி, கும்மி, குடமூதல், குதிரையாட்டம், கரகம், கோலாட்டம், செம்பு நடனம் ஆகிய பாரம்பரிய நிகழ்வுகளும் இடம் பெறும்.

உருவச்சிலை வளாக நிகழ்வுகள் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் முல்லை மாவட்ட தமிழ்ச்சங்கத்தலைவர் க.சரவணபவன், இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரியும் பண்டார வன்னியன் திருவுருவ வரையருமான அமரர். எஸ் வரதராஜா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (05)

## துயர் பகிர்வோம்

பிறப்பு 07 - 05 - 1960



இறப்பு 21 - 08 - 2005

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

நிரந்தர முகவரி–தென்னமரவாடி, திருகோணமலை.

தற்போதையமுகவரி– பொன்நகர், முள்ளியவளை.

*எமது வாணிப பணியாளர் பொ. இந்திரஜித் அவர்களின் தந்தையாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

தகவல்:-
பணிப்பாளர்,
பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
இளவேனில் வாணிபம்.

(6660)

## யாழ். குடா நாட்டில் படையினரின் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும், கிராமப்பகுதிகளிலும் சிறிலங்கா படைகளால் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் துண்டுப்பிரங் களில். பொதுமக்களை ஏமாற்றும் பல வாசகங்கள் இருப்பதுடன். மக்கள் எழுச்சிகளையும், போராட்டங் களையும் ஒடுக்கி அச்சுறுத்தும் விதத்திலும் வாசகங்கள் காணப்படு கின்றன.

இந்தத் துண்டுப்பிரசுரங்களுக்கு படைத்தரப்பினர் உரிமைகோரி இருக்கின்றனர். (28)

---

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) M9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்வி பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(01) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 23.08.2005-31.08.2005 பி.ப 2 மணி வரை

(02) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:-01.09.2005 நண்பகல் 12 மணிவரை

(03) கேள்வி திறக்கப்படும் திகதி:- 01.09.2005 பி.ப2 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)

(04) கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.

(05) மூலக் கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையுலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(06) மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|---|
| 01 | மானிப்பாய் மெமோறியல் வீதி புனரமைப்பு | 3800.00 | 300.00 | 45.00 |
| 02 | உயரப்புலம் மாரீசன்கூடல் வீதி புனரமைப்பு-(கிரவல், மதகு அமைப்பு) | 6700.00 | 500.00 | 75.00 |
| 03 | பண்டத்தரிப்பு செண்மேரிஸ் வீதி புனரமைப்பு | 8000.00 | 500.00 | 75.00 |
| 04 | பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதி புனரமைப்பு | 6800.00 | 500.00 | 75.00 |
| 05 | மாதகல் காஞ்சிபுரம் வீதிபுனர மைப்பு (தொடர் வேலை) | 6600.00 | 500.00 | 75.00 |
| 06 | கட்டுடை கெனடி வீதி புனரமைப்பு | 2100.00 | 250.00 | 37.50 |
| 07 | மானிப்பாய் மூனாலை வீதி புனரமைப்பு | 2400.00 | 250.00 | 37.50 |
| 08 | பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதி புனரமைப்பு | 4500.00 | 300.00 | 45.00 |
| 09 | நவாலி ஏ.சி.ரி.எம் வீதி (தொடர்) புனரமைப்பு | 3000.00 | 300.00 | 45.00 |
| 10 | நவாலி பொன்னுச் சாமி வீதி புனரமைப்பு | 3900.00 | 300.00 | 45.00 |
| 11 | சுதுமலை வடக்கு கேணிக் கரை ஒழுங்கை புனரமைப்பு (கிரவல்) | 900.00 | 250.00 | 37.50 |
| 12 | சண்டிலிப்பாய் பழைய கறாஜ் வீதி இணைப்பு வீதி புனரமைப்பு (தொடர் வேலை) | 3800.00 | 300.00 | 45.00 |
| 13 | மானிப்பாய் வங்கி முன் வீதி-ரி.சி வீதி இணைப்பு வீதி(கிரவல் வேலை) | 1200.00 | 250.00 | 37.50 |

திரு. மேரிஜோசப்சாந்தசீலன்,
செயலாளர்,
வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி.12580)

# சீனாவில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு 46 பேர் உயிரிழப்பு; வீடுகள் பலசேதம்

(பீஜீங்)

**சீனாவில் தொடர்ந்து பெய்துவரும் கடும்மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு,மண்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்துள்ளது.**

தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கினால் பெங்குவான் மாகாணம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு 35 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

ஒரு வாரகாலத்தில் அங்கு சுமார் 30 மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் எட்டுப்பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. பல வீதிகளும் நகரங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் ஐநூறுக்கு மேற்பட்ட வீடுகள் மண்சரிவினால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தென்பகுதியில் தொடர்ந்து சில நாட்களுக்கு கடும் மழை பெய்யும் என்றும் இதனால் வெள்ள அபாயம் அதிகரிக்கும் என்று சீனாவின் வளி மண்டலத்திணைக்களம் அறிவித்துள்ளது.

## தொடர்ந்தும் பிரதமராக இருக்க கொய்சுமி விரும்பவில்லையாம்



(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் யுனிசிறோ கொய்சுமி 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் பின்னர் தொடர்ந்தும் பதவியில் இருக்க விரும்பவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் நடைபெற இருக்கும் தேர்தலில் அவரது கூட்டணி வெற்றி பெறும் பட்சத்திலும் கூட அவர் தொடர்ந்தும் பதவி வகிக்க மாட்டார் என்று கட்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜப்பானில் கடந்த இரு தசாப்த காலத்தில் கூடுதலான காலம் பிரதமர் பதவி வகித்த கொய்சுமி தனது பதவிக்காலத்தை நீடிக்கக் கூடும் என்று கருதுவதாக கூட்டணி அங்கத்தவர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

## அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுக்கின்றார் கியூப சனாதிபதி

கியூபாவின் சனாதிபதி பிடல்கஸ்ரோவும் வெனிசுலா சனாதிபதி கியூபோ சாவீஸூம் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள ஸ்திர நிலையைச் சீர்குலைப்பதில் பின்னணியில் உள்ளனர் என்பதான அமெரிக்கா தெரிவித்த குற்றச்சாட்டை வெனிசுலா சனாதிபதி நிராகரித்துள்ளார்.

கியூபாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட வெனிசுலா சனாதிபதி கியூபோ சாவீஸ் கியூப சனாதிபதி பிடல் கஸ்ரோவுடன் கலந்துகொண்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமெரிக்காவின் அந்தக் கூற்றை நிராகரித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், வெனிசுலாவில் உள்ள மக்கள் அரசாங்கத்தைப் பதவி நீக்குவதற்கு, வோஷிங்டன் சதித் திட்டங்களை வகுத்துவருவதாகவும் கூறிய கியூபோ சாவிஸ், அப்படி நடக்குமானால் அது பாரதூரவிளைவுகளை ஏற்படுத்துமெனவும் அவர் கூறினார்.

## காஸா குடியேற்றங்களில் இருந்து வெளியேற மறுக்கும் யூதர்களை வெளியேற்றும் பணியில் இஸ்ரேல் ராணுவம்





பலஸ்தீன காஸா குடியேற்றங்களில் இருந்து இன்னமும் வெளியேற மறுக்கும் யூதக்குடியேற்ற வாசிகளை வெளியேற்றும் இறுதி நடவடிக்கைகளை இஸ்ரேலியப்படையினர் மேற்கொண்டுள்ளனர். இதன்படி அவர்கள் பலஸ்தீனத்தில் யூதர்கள் இன்னமும் தங்கியுள்ள கடைசி குடியிருப்புப் பகுதியை நோக்கி நகர்ந்துள்ளனர். காஸா பிரதேச குடியேற்றங்களில் சுமார் ஒன்பதாயிரம் குடியேற்றவாசிகள் வசித்து வந்தனர். இவர்களில் இதுவரை பெரும்பாலானோர் வெளியேறியுள்ளனர். ஏனையோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## லண்டனில் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு வேலை வாய்ப்பு அதிகரிப்பு

(லண்டன்)

லண்டனில் வேலை வாய்ப்புக்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய தொழில்கள் பல கிடைக்கப்பெறுவதாக நேற்று வெளியான மதிப்பீட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அதிகரிக்கத் தொடங்கி இவ்வாண்டு வலுவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தாய்வானில் பொலிசார்-தொழிலாளர் மோதல் இரு தரப்பிலும் பலர் காயம்

தாய்வானில் கடமை புரிகின்ற வெளிநாட்டு தொழிலாளர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தாய்வானின் தெற்குப்பகுதியில் இடம்பெற்ற இந்த மோதல் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.

வெளிநாட்டு தொழிலாளர்கள் தங்கியுள்ள இடங்களில் புகைத்தல் மற்றும் சூதாட்டம் நடத்துவதற்கு தடைவிதிக்க தாய்வான் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கடமை புரிகின்ற வெளிநாட்டு தொழிலாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இதில் 1600 இற்கு மேற்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்கள் பங்குபற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்களைத் தீயிட்டுக்கொளுத்தியதுடன் பொலிசார் மீது கற்களைவீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனை அடுத்து பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தின் போது இரு தரப்பிலும் பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக தாய்வான் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## தீவிரவாதத்தை கைவிட்டு தேர்தலில் குதியுங்கள் மாவோயிஸ்ட், நக்சலைட்டுக்களுக்கு வேண்டுகோள்

### -இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விடுத்தார்



மாவோயிஸ்டுக்களும் நக்சலைட்டுக்களும் தங்களது வன்செயல்களைக் கைவிட்டு தேர்தலில் போட்டியிட்டு மக்கள் மத்தியில் தங்களுக்குள்ள ஜனரஞ்சகத் தன்மையை நிரூபிக்க வேண்டுமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆந்திரப்பிரதேசத்தில் "பத்திரிகைகளும் நாடும்" என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், எந்தவொரு தீவிரமான விடயத்திற்கும் சனநாயக வழிமுறைகள் மூலமும் பேச்சுக்களின் அடிப்படையிலும் தீர்வுகாண முடியும் எனக்கூறிய அவர் பயங்கரவாத நடவடிக்கைகளினால் அச்சுறுத்தப்பட்டுள்ள இந்திய அரசாங்கத்திற்கு அத்தகைய பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு அவற்றை ஒழித்துக்கட்டுவதை விட வேறுவழி இல்லை என்றும் அவர்மேலும் கூறினார்.

## கிளர்ச்சியாளர்கள் கண்ணிவெடித் தாக்குதல்; நேபாளத்தில் நான்கு இராணுவத்தினர் பலி

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் கிளர்ச்சியாளர்களின் கண்ணிவெடியில் சிக்கி நான்கு பொலிசார் உயிரிழந்துள்ளனர். மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவிக்கையில், இந்தத் தாக்குதல் மலைக்கிராமம் ஒன்றில் நிகழ்ந்ததாகக் கூறினார்.

இரண்டு வாரத்துக்கு முன்னர் கிளர்ச்சியாளர்கள் நேபாளத்தின் இராணுவத்தளம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 52 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் 24 கிளர்ச்சியாளர்களும் உயிரிழந்தனர்.

ஓராண்டு காலத்தில் இருதரப்பினருக்கும் இடையில் நிகழ்ந்த மோசமான சண்டை இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்தில் மனித உரிமைக்குழுவொன்று தெரிவிக்கையில், இந்தச் சண்டையில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் கிளர்ச்சியாளர்களின் வசம் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது. மலைப்பகுதிக் கிராமம் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கும் இவர்களை உள்ளூர் பத்திரிகையாளர் ஒருவர் சந்தித்ததாக அது அறிவித்துள்ளது.

## ஆயுததாரிகள் பொலிசார் மீது தாக்குதல் ஈராக்கில் எட்டுப்பொலிசார் உட்பட 10 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் வடக்குப் பகுதியில் எட்டுப் பொலிசார் உட்பட பத்து ஈராக்கியர்கள் ஆயுதம் தாங்கிய நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிசாரும் வைத்தியசாலை வட்டாரங்களும் தெரிவித்துள்ளன.

பொலிஸ் நிலையத்தில் இருந்து சிவில் உடையில் சென்ற பொலிசார் வான் ஒன்றில் பயணம் செய்த சமயம் காரில் பின்தொடர்ந்து சென்ற ஆயுததாரிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

## ஆசிய சனத்தொகையில் இளம் பராயத்தினர் அரைவாசிக்கு மேற்பட்டோர் வறுமையில் உள்ளனர்

### -ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

ஆசிய சனத்தொகையில் இளம்பராயத்தினரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வறுமை நிலையில் உள்ளனர் என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு சுமார் 600 மில்லியன் சிறுவர்கள் வறுமைநிலையில் இருக்கின்றனர் என்று இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலைய ஆசியப்பிராந்தியப் பணிப்பாளர் மைக்கல் டானிக் ஆசியப்பிராந்திய சிறுவர்களின் நலன்புரி தொடர்பாக விடுத்துள்ள ஆய்வறிக்கையில் இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனேக நாடுகளில் சிறுவர்களின் நலன்களில் அதிக அக்கறையில்லாததே இந்த நிலைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதலான சிறுவர்களுக்கு சுத்தமான ஆடைகள், இருப்பிடவசதி, கல்விவசதிகள் மற்றும் உணவுப்பொருட்கள் போதியளவு கிடைக்கவில்லை என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தியா, சீனா உட்பட ஆசிய நாடுகளில் 750 மில்லியன் சிறுவர்கள் மிகவும் வறிய நிலையில் இருக்கின்றனர் என்றும் 250 மில்லியன் சிறுவர்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருக்கின்றனர் என்றும் மைக்கல் டானிக் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆபிரிக்காவில் மீன் உற்பத்தி குறைவடைகிறது பாவனை அளவைப் பேண ஆபிரிக்கா திட்டம்

ஆபிரிக்காவில் மீன் உற்பத்தி பண்ணைகளை முதலீடு செய்வது அவசிய தேவையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கையாக கிடைக்கும் மீன்களை அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப ஈடுசெய்ய முடியாத நிலையிலேயே இந்தத் தேவை ஏற்பட்டுள்ளது.

இருபது கோடி ஆபிரிக்க மக்கள் தமது பிரதான உணவாக மீனை உட்கொண்டு வருகின்றனர்.

உலகிலேயே தனிநபர் ஒருவருக்கான மீனின் அளவு வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் நடைபெறும் அனைவருக்கும் மீன் என்ற தலைப்பிலான உச்சி மாநாட்டுக்கு தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இந்த தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மீன் பாவனை அளவை பேணுவதற்கு ஆபிரிக்காவுக்கான மீன் விநியோகம் 2020 ஆம் ஆண்டளவில் 32 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டியுள்ளது.

மீன் உற்பத்தி பண்ணைகள் அமைக்கப்படுவதன் மூலம் ஆபிரிக்காவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியிருக்கும் பெருந்தொகையான மக்களுக்கு வேறு நோய்கள் தொற்றாது பாதுகாப்புக்குத் தேவையான புரதம், விற்றமின், கனிப்பொருள் என்பவற்றை கொண்டிருக்கும் மீன் உணவு அவசியமாகும்.

# தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கான முன்னோடி ஏற்பாடுகள் கிளிநொச்சியில் தீவிரம்!

## பிரதேச ரீதியாக விசேட கலந்துரையாடல்கள்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சியில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாடு சம்பந்தமான கலந்துரையாடல்கள் பிரதேச ரீதியாக நடைபெற்று வருகின்றன.**

கிளிநொச்சிப் பிரதேச எழுச்சிப் பிரகடனக் குழு மற்றும் எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதேபோன்று அன்றைய தினம் பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி தொழில் நுட்ப நிறுவனத்தில் நிர்வாக அலுவலர் அமிர்தினி தலைமையில் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன ஏற்பாட்டுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசிய எழுச்சி செயலணிக்குழு செயலர் வேளமாலிகிதன், கிளி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சு.பசுபதிப்பிள்ளை, செயலணிக்குழு ஊடக இணைப் பாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது.

மற்றும் அக்கராயன் பிரதேச எழுச்சிப் பிரகடனக் குழு மற்றும் எழுச்சிப் பேரவைகள் ஏற்பாட்டில் கிராம ரீதியாக



தமிழீழ எழுச்சிக் குழுக்கள் தெரிவு செய்யப் பெற்று எழுச்சிப் பிரகடன மாநாடு சம்பந்தமான கலந்துரையாடல்கள் வீடு வீடாகச் சென்று நடைபெற்று வருகின்றன.

அக்கராயன் பிரதேச தமிழீழ எழுச்சிப் பிரகடன குழுத் தலைவர் வே.விஜயரட்ணம், எழுச்சிப் பேரவைச் செயலர், ப.சபாரட்ணம் ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

அக்கராயன் ஆனைவிழுந்தான் பிரதேசத்தில் ஆனை விழுந்தான் விளையாட்டு வீரர்கள்,ஆனைவிழுந்தான் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்கள் தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாகச் சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முன்பள்ளிக் கட்டடத்திற்கு பாலி நகரில் அடிக்கல் நாட்டல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன் குளம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் போரூட் நிதியு தவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையோடு மல்லாவி சமூக மேம்பாட்டு நிறுவனத்தினரால் பாலி நகர் கிராமத்தில் சிறார்களுக்கான புதிய முன்பள்ளி கட்டு மானத்திற்கு அடிக்கல் நாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை, முற்பகல் 12.00 மணிக்கு சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் க.சிவா தலைமையில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் முன்பள்ளி கட்டுமானத்திற்கான அடிக்கல்லினை கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன (ரீடோ) நிர்வாக அலுவலர் வ. நவரத்தினம் நாட்டினார். இதனைத் தொடர்ந்து சமூக மேம்பாட்டு நிறுவனத் தலைவர் போரூட் வெளிக்கள பணிப்பாளர், சமூக, பொருளாதார அபிவிருத்தி தலைவர், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் முன்பள்ளி நிர்வாகத் தலைவர் ஆகியோர் அடிக்கல்லினை நாட்டி வைத்து கருத்துரைகளையும் வழங்கினர். இந் நிகழ்வில் பொது அமைப் புக்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(24)

# கண்டாவளை வெலிக்கண்டலில் குடிசை தீப்பற்றி எரிந்தது

(கண்டாவளை)

கண்டாவளை வெலிக்கண்டல் பகுதியில் கடந்த வியாழக் கிழமை சின்னப்பு செல்வராஜா என்பவரது வீடு தீப்பற்றி எரிந்தது. குப்பி விளக்கை அவரது குழந்தை வீட்டுக்கு சுற்றி கட்டியிருந்த கிடுகில் பிடித்த வேளை அதில் பிடித்த தீ வீட்டுக் கூரையிலும், பிடித்து எரிந்துள்ளது. உடனே அழுகுரல் கேட்டதும் வீதியால் சென்ற மக்கள் உடன் செயற்பட்டு வீட்டிலிருந்த பொருட்களை வெளியே தூக்கி வீசி அப்புறப்படுத்தியதுடன் தண்ணீர் ஊற்றி தீயை அணைத்த போதும் வீட்டின் பெருமளவு தடிகள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன. (14)

# போசாக்கு அபிவிருத்தி வீட்டுத்தோட்டம் பற்றிய பயிற்சிநெறி

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 2005 ஆம் ஆண்டு பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் போசாக்கு அபிவிருத்தி வீட்டுத்தோட்டம் பற்றிய பயிற்சி நெறி பின்வரும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை4.00 மணிவரை நடைபெறவுள்ளது. 26 ஆம் திகதி சம்புக்குளம் மக்களுக்கு கல்மடுநகர் பாடசாலையிலும் 29 ஆம் திகதி நாகேந்திரபுரம் அ.த.க பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி கிளி.மாவட்ட சுகாதார வைத்தியஅதிகாரி வைத்திய கலாநிதி பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப் பயிற்சி நெறியில் புளியம்பொக்கணை மருத்துவமாது வதனி குழந்தை பராமரிப்பும், தாய்ப்பால் ஊட்டலும், கர்ப்பிணித் தாய்மாரும் அவர்களின் உணவுப் பாவனையும் பற்றி கருத்துரைகளையும் வழங்குவார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் அவர்களும் கருத்துரை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் புளியம்பொக்கணை கிழக்கு விவசாயப்போதனாசிரியர் செல்வி.மாலினி அவர்கள் வீட்டுதோட்டப்பயிற்செய்கை பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். இப் பயிற்சி நெறியில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள் தவறாது கலந்து பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றனர்.(14)

# இரு அமர்வுகளாக நடைபெற்ற வவுனியா மாவட்ட கலாச்சார விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட கலாச்சார விழா நேற்று முன்தினம் காலை, மாலை என இரு அமர்வுகளாக வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.


வவுனியா மாவட்ட செயலகத்தினதும் மாவட்ட கலாச்சாரப் பேரவையினதும் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கலாச்சார விழாவிற்கு வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் தலைமை தாங்கினார். காலை அமர்வில் "தேசத்தின் நிலைமைதனை தெருவில் இறங்கிப்பேசப்பொருள்கள் பேசத்துணிந்தால்" என்றதலைப்பிலான கவியரங்கும், அருணா செல்லத் துரையின் "அடங்காப்பற்று வரலாறு" என்ற நூல் அறிமுகமும் வவுனியா மாவட்ட கலாச்சாரப்பேரவையால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

மாலை அமர்வில் தமிழ், சிங்கள முஸ்லிம் இனங்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப் பினர்களான சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன் சிவசக்தி ஆனந்தன் வினோ நோகராதலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (10)

## மன்னாரில் இலக்கிய விழா

வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாச்சார அமைச்சு இவ் வருட இலக்கிய விழாவை எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் மன்னாரில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

மேற்படி மன்னார் நகர மண்ட பத்தில் இலக்கிய விழா நடைபெற ஏற்பாடா கியுள்ளது.



இராணுவ நடவடிக்கையின் போது சேதமுற்ற ஒட்டுசுட்டான் கிராம அபிவிருத்தி சங்கம் இதுவரையும் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதைப் படத்தில் காண்க. (படம்:- கவியரசன்)

# பாடசாலைகள், வைத்தியசாலைகளுக்கு முன்பாக வாகனங்களின் வேகத்தைக்கட்டுப்படுத்துக

## -தமிழீழ காவல்துறையினர் அறிவுறுத்து

(அலுவலகசெய்தியாளர்)

வைத்தியசாலைகள், பாடசாலைகளுக்கு முன்பாக பயணிக்கும் வாகனங்கள் அனைத்தும் வேகத்தைக் கட்டுப்படுத்தி 20 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் வண்ணம் தமிழீழ காவல்துறைநகர போக்கு வரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சி.சிவ குமாரன் வேண்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு செல்லும் நோயாளர்கள் எதிர்நோக்கி வரும் வீதிக்கடவைப்பிர[illegible]னை மற்றும் வீதி விபத்துக்களில[illegible]ந்து மாணவர்கள், நோயாளர்களைக் காப் பாற்றும் வகையிலும் இப்பகுதிகளில் 20 கி. மீற்றர் வேகத்தில் வாகனங் களை செலுத்திச்செல்லும் வண்ணம் வேண்டியுள்ளார்.

இதற்கென பாடசாலைகள், வைத்தியசாலைகள் அமைவிடங்களுக்கு அருகாமையில் அதற்கான குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ள தெனவும் மேற்படி விதி முறையினை கடைப்பிடிக்கத்தவறும் வாகனச்சாரதி கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படுமெனவும் தமிழீழ காவல்துறை நகர போக்குவரத்துப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

# கௌரவிப்பு நிகழ்வு

(முல்லைத்தீவு)

சுனாமி அனர்த்தத்தின் போது முல்லைத்தீவு மக்களுக்கு லண்டனிலிருந்து வருகை தந்து உடனடி உதவி வழங்கிய வைத்திய கலாநிதி தவராசா அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி தவராசாவுக்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அவரது சேவையினைப் பாராட்டி தங்க மோதிரத்தினை முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரான து.வி. ஜெயக் குலராசா அணிவித்தார்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலைப் பணியாளர்கள் கடற்றொழிலாளர் கூ.ச. சமாசப் பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (20)

# கட்டைபறிச்சான் கிராம மக்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மூதூர் கிழக்குப் பகுதியில் சுனாமிப் பேரலையாலும், போர்ச்சூழலினாலும் முற்றாகப் பாதிக்கப்பட்ட கட்டை பறிச்சான் கிராம மக்களுக்கு கடந்த புதனன்று காலி குல்லா படகுகள் 20, குல்லாப் படகுகள் 15, வலைகளுமாக முதற் கட்டமாக வழங்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் தலாஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியானவை.

இந் நிகழ்வு திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், திருகோணமலை மாவட்ட கடற்புலிகளின் சமாசப் பொறுப்பாளர் வைகை ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் பெருந்திரளான பொது மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பமைச்சு அனுமதிக்காது விட்டால் கண்ணி வெடி அகற்றலை முன்னெடுக்க முடியாது

– வவுனியா அரச அதிபர் சி.சண்முகம்

(வவுனியா)

**வவுனியாவில் உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்தும் அனுமதிக்காது விட்டால் கண்ணிவெடி அகற்றும் பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாதநிலை ஏற்படும் என வவுனியா அரசஅதிபர் சி. சண்முகம் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் கண்ணிவெடி அகற்றப்படுகின்றது. கண்ணி வெடிகள் உள்ளதாக இனங்காணப் பட்ட 41 கிராமங்களில் 27 கிரா மங்களில் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. 14 கிராமங்களில் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. இக் கண்ணிவெடி அகற்றும் பணியில் சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு ஜப்பானிய கண்ணிவெடி அகற்றும் குழு உட்பட பல்வேறு குழுக்கள் ஈடுபட் டுள்ளன.

இவை வவுனியா மாவட்டத்திலு ள்ள 829,333 சதுர மீற்றரில் 9,700 கண்ணிவெடிகளை அகற்றியுள்ளன. இவ் வருட இறுதிக்குள் கண்ணி வெடி அகற்ற பாதுகாப்பு அமைச்சு அனுமதித்த இடங்களில் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விடும். பாதுகாப்பு அமைச்சு தொடர்ந் தும் ஏனைய உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்ற அனுமதி அளிக்காதுவிட்டால் கண்ணி வெடி அகற்றும் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலையில் கண்ணிவெடிகள், அகற்றும் பணி நிறுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

# சட்டவிரோதமாகக் குடியேறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பணிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் உள்ள அரச காணிகளிலும், குளக்காணிகளிலும் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டி லேயே அரச அதிபர் இத்தகவலை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; வவுனியாவில் உள்ள பல கிராமசேவை அலு வலர்பிரிவுகளிலுள்ள அரசகாணி களைப் பலர் சட்ட விரோதமாக துப் புரவு செய்து பயன்படுத்துவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதற்கமைய சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவர் களைக் கைது செய்து நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கு மாறு சகல பிரதேச செயலர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளேன் என்றார்.

வவுனியா அண்ணாநகர் பரமேஸ் வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் ஒருவர் சட்டவிரோத மாக குடியேறியுள்ளார். அச்சட்ட விரோதகுடியேற்றத்திற்கு வவுனியா பிரதேச செயலர் ஆதரவாக உள்ளார். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள்? என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அரச அதிபர் பதில் அளிக்கையில்; அவ்வாறான ஒரு முறைப்பாடு எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. சட்டவிரோத குடி யேற்றத்திற்கு பிரதேச செயலர் ஆத ரவாக இருக்கின்றார் என்ற முறைப் பாடு எழுத்து மூலமாக கிடைக்கு மாயின் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வவுனியா பிரதேச செயலரும் நீதிமன்றில் ஆஜர்செய்யப்படுவார் என்றார். (10)

# திரையரங்கு உரிமையாளர் மீது மன்னாரில் வாள்வெட்டு

(மன்னார்)

மன்னாரில் திரையரங்கு உரிமை யாளர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. மன்னாரைச் சேர்ந்த ராஜா (வயது-44) என்பவரே வாள்வெட்டுக்கு இலக் கானவராவார்.

வாள்வெட்டுக்கு இலக்காகி தனது இடது கையை இழந்த நிலை யில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு அனுராத புரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு,அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் சுயநினைவை இழந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். (18)

# மாவீரர் குடும்பங்கள் கௌரவிப்பும் வீரமுரசு அரங்க நிகழ்வும்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு- மூங்கிலாறு பகுதி மாவீரர் குடும்பங்கள் கௌர விப்பும் வீரமுரசு அரங்கும் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உடையார்கட்டு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் விஜய குமார் தலைமையில் இடம்பெற்றது.

மூங்கிலாறு மாவீரர் மண்டப முன்றலில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் மாவீரர்களின் குடும்பத் தினர் நிகழ்வு வளாகத்தில் பிரத்தி யேகமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலிற்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

இங்கு வைக்கப்பட்டிருந்த மாவீரர் களின் திருவுருவப் படங்களிற்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணி விப்பை மூங்கிலாறு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவா, மற்றும் மாவீரர் உறவுகள் மேற்கொண்டனர்.

நிகழ்வில் சமகால அரசியல் கருத்துரையை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந் தன் வழங்கினார்.

பாரதி சிறுவர்இல்ல மாணவர்கள், வசிகரன் பூங்கா மாணவர்கள் மற்றும் உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை துணுக்காய் பிரதேச கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் மாதாந்த வீரமுரசு கலை நிகழ்வும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ் வுகள் அம்பலப்பெருமாள் பிள்ளையார் ஆலய முன்றலில் கடந்த புதன் கிழமை இரவு 7.00 மணிக்கு கோட் டைகட்டியகுளம் கிராம சேவையாளர் ச. மரியதாஸ் தலைமையில் இடம் பெற்றது.

மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடர்கள் ஏற்றி மலர் மாலைகளை மாவீரர்களின் பெற்றோர் கள் அணிவித்தனர்.தொடர்ந்து அரங்க நிகழ்வில் வரவேற்பு நடனத்தை கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலை மாணவிகள் நிகழ்த்தினர். கருத்துரைகளை துணுக்காய் பிரதேச தேசிய எழுச்சி பேரவையைச் சேர்ந்த சிவா, கிராம சேவையாளர் எஸ். இராஜரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் நாடகம், நடனம்,பாடல்கள், கவிதைகள் என் பன இடம்பெற்றன. இதில் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சி பேரவையினர், மக்கள் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (24,19)

# நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ள மாணவர்களை உருவாக்க வேண்டும்

யாழ்.கல்வியியற்கல்லூரி மேலதிகபீடாதிபதி

(வவுனியா)

பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகிவரும் நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய மாணவர்களை உருவாக்க வேண்டி யவர்கள் ஆசிரியர்களே என யாழ்ப் பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் மேலதிக பீடாதிபதி எஸ்.கே யோக நாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்ற தொழில் வழிப்படுத்துனர்களுக்கான கருத் தரங்கில் சிறப்புரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில், ஒரு நாடு வளர்ச் சியடைய வேண்டுமாயின் அங்கு கல்வி வளர்ச்சி அடைய வேண்டும் கல்வி வளர்ச்சி அடைந்தால் தான் தனி மனிதன் வளர்ச்சியடைய முடியும். ஒரு நாட்டின் துரித முன் னேற்றம் கல்வியில் தங்கியுள்ளது. ஒரு நாட்டின் நற்பிரசைகள் உரு வாக கல்வியே அடிப்படைக் காரணம் நற்பிரசைகள் இருந்தால் தான் நாடு அபிவிருத்தி அடையும்.

இலங்கையில் இதுவரை இருந்த கல்வி முறை பொருத்தமானதா என நீங்கள் அனைவரும் ஒரு கணம் சிந்தியுங்கள். இக் கல்வி முறை பொருத்தமானதாக இருந்திருந்தால் இலங்கையின் நிலை இன்று கவலைக்கிடமாகமாறி இருக்காது. இலங்கையின் நிலை கவலைக் கிடமாக இன்று மாறி இருப்பதற்கு இலங்கையில் உள்ள பொருத்தமற்ற கல்வி முறையே காரணம்.

உலக மாற்றங்களுக்கேற்ப கல்வி முறை மாற்றப்பட வேண்டும் கல்வி முறை மாற்றப்படும் போது கற்பித்தல் முறையும், மாற்றப்பட வேண்டியது அவசியமாகும். இம் மாற்றங்களை நடைமுறைப்படுத்து பவர்கள் ஆசிரியர்களே. இம் மாற்றங் களை நடைமுறைப்படுத்தி பிள்ளை யின் திறனை வளர்க்க வேண்டிய வர்கள் ஆசிரியர்களே. நவீன உலகிற்கு தேவையான திறனை மாணவர்களிடம் வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் இதயசுத்தியுடன் சேவையாற்ற வேண்டும் என்றார். (10)

# அலுவலகங்கள் இடமாற்றம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சிறிசுப்பிர மணிய வித்தியாசாலையில் ஒரு பகுதியில் இயங்கி வந்த முல்லை வலயக் கல்விப் பணிமனை கடந்த 17 ஆம்திகதி முதல் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் , ஒரு பகுதியில் (புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதி யில் பிரதான பஸ்தரிப்பிடத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது.

இதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில், ஒரு பகுதியில் இயங்கிவந்த புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலகம், புதுக் குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தி யாசாலையில் இயங்கிவருகின்றது. (08)

# இலக்கிய கலைப்போட்டியில் முதலாமிடம் பெறுவோர்

(வவுனியா)

வவுனியா மாவட்ட செயலகத் தினதும் மாவட்ட கலாச்சாரப் பேரவை யினதும் அனுசரணையுடன் நடை பெறவுள்ள கலாச்சார விழாவை ஒட்டி வவுனியாவில் நடைபெற்ற இலக்கிய கலைப்போட்டியில் முதலாமிடம் பெற்ற படைப்புக்களும் அதன் ஆக்க கர்த்தாக்களும் தொடர்பான விபரங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

கட்டுரைப்போட்டி,சிரேஷ்டபிரிவு, முதலாமிடம்.''நாட்டில் ஒழுக்க நெறியை வளர்ப்பதற்கு சமயக்கல்வி யின் முக்கியத்துவம்" கவிதாஞ்சலி ஏகாம்பரம், துடரிக்குளம் வீதி, செட்டி குளம். கனிஷ்ட பிரிவு, முதலாமிடம். "வாசிப்பு மனிதனை முழுமையான வனாக்குகின்றது.'' பாஸ்கரராசா, ஜெயதீபா, வ.குளவிசுட்டான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நெடுங்கேணி.

கவிதைப்போட்டி (திறந்த) முதலா மிடம். "கொடிய அலைகள்" நாகலிங் கம் தியாகராசா பூங்காவீதி, வவுனியா.

சிறுகதைப்போட்டி (திறந்த) முதலாமிடம்."சுனாமிதந்த சுமைகள்" திருமதி ஆர். றலீனா, இல.20, பள்ளி வாசல் வீதி, பட்டாணிச்சூர், வவுனியா.

குறுநாடக கையெழுத்துப் பிரதிப்போட்டி (திறந்த) முதலாமிடம். "தீர்வு எப்போது வரும்"? திருமதி. நெலோமி அன்ரனி குருஸ், இல.233, முதலியார்குளம், செட்டிகுளம்.

சித்திரப்போட்டி சிரேஷ்டபிரிவு முதலாமிடம்." இராமரை மானைப் பிடித்துத் தருமாறு சீதை கேட்டல்" துஷாஜினி றிவேந்திரன், வ.நெளுக் குளம் கலைமகள் வித்தியாலயம், வவுனியா, கனிஷ்டபிரிவு. முதலா மிடம் "ஆற்றங்கரையோரத்தில் ஓரிரவு" எம்.லுபினா பானு, வ.மதீனா வித்தியாலயம், வவுனியா. திறந்த போட்டி முதலாமிடம். "ஆற்றங்கரை யோரத்தில்.ஓரிரவு" பேதுறுப்பிள்ளை செபமாலை, இல.613, மறவன்குளம், வவுனியா.

நாட்டுப்புறப்பாடல்.கனிஷ்டபிரிவு முதலாமிடம். ம.அமலன், வ.மாறா விலுப்பை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை நெடுங்கேணி, சிரேஷ்ட பிரிவு.முதலாமிடம் ம.மைதிலி, வ.மாறாவிலுப்பை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நெடுங்கேணி, திறந்த போட்டி முதலாமிடம். பேது றுப்பிள்ளை செபமாலை, இல.613, மறவன் குளம், வவுனியா, ஆங்கில கட்டுரை. முதலாமிடம். "வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது, எஸ்துளசினி, வ/றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா. (10)

# இடைத்தங்கல் முகாமில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு குடாரப்பு இடைத்தங்கல் முகாமில் கடந்த வியாழக் கிழமை சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது. ஆழியவளை திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக் குழுவினருடன் இணைந்து சமூக நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றின் தொண்டர்கள் இதனை நடாத்தினர். இதன்போது 30 குடும்பத்திற்கு வீட்டுத் தரிசிப்பும் செய்யப்பட்டுள்ளது.

# ஆங்கிலக் கல்லூரி அமைக்க மன்னாரில் நடவடிக்கை

(மன்னார்)

மன்னாரில் ஆங்கிலக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.வடக்குக் கிழக்கு கல்வி பண் பாட்டு அலுவல்கள் அமைச்சு உலக வங்கியின் நிதியுதவியுடன் எட்டுக் கோடி 30 இலட்சம் ரூபாவை துறை சார்ந்த நிவாரண நிதியில் இருந்து பெறுவதற்கு அனுமதி பெற்றுள்ளது. இது தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறுபேரும் நாளை சனாதிபதி சந்திரிகாவைச் சந்திக் கவுள்ளனர். (18)

# அத்வானியின் தலைமைக்கு ஆபத்து?

இந்தியாவில் பாரதிய ஜனதாவுக்குள் உட்கட்சிப் பூசல் உச்சக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.இதனால்தான் தேசியளவில் இக் கட்சி சிதறி சின்னா பின்னமாகி விடுமோ...எனும் சந்தேகம் அக்கட்சி குறித்து எழுந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை.

“ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குகொண்டாட்டமாம்” என்பது போல் பாரதிய ஜனதாவினுள் ஏற்பட்டிருக்கும் கசமுசாக்கள் ஆளும் கட்சிக்கு சாதகமாகி விடப் போகின்றது என்பதையும் நிராகரிக்க முடியாது!

ஏனெனில் மத்தியரசை சந்தோஷமாக சுதந்திரதினத்தை கொண்டாட விடாமல், நானாவதி விசாரணைக் குழுவின் அறிக்கையினை உருவாகி இருக்கின்றது.இந்த சூறாவளி டில்லி பாரதிய ஜனதா வரை சூழன்றடித்திருக்கின்றதும் அதனால் நரேந்திரமோடி ஆடிப் போயுள்ளமையும் தெரிய வருகின்றது.

நரேந்திரமோடிக்கு எதிரான எதிர்ப்பலை இப்போது புதிதாக தோன்றியுள்ளதொன்று என்று கூறிவிட முடியாது. அது குஜராத் கலவரத்தை(2002- பெப்ரவரி) அடுத்து உருவான போதும் வாஜ்பாயின் அழுத்தம் காரணமாக அமுங்கிப் போய் விட்டது என்றுதான் கூறவேண்டும்.ஏனெனில் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோதே குஜராத்தில் கலவரம் வெடித்தது.தனது தலைமைத்துவத்தின் பலனாக வாஜ்பாய் எல்லாவற்றையும் சடைந்து பூசி மெழுகி விட்டார் என்றால் மிகையில்லை.

ஆனால்இன்றோ அமுங்கியிருந்த எதிர்ப்பலை மீண்டும் வெடித்துள்ளது. குஜராத்தின் முன்னாள் முதல்வர் கேசுபாய் படேல் தலைமையில் நரேந்திரமோடியின் அமைச்சரவை உறுப்பினர்கள் 60 பேர் திரண்டிருக்கின்றார்கள்.

முன்னாள் முதல்வர் கேசுபாய் படேல் தீவிரமான மோடி எதிர்ப்பாளா மோடி முதல்வராக பதவியேற்றது முதல் தனது எதிர்ப்பலையினை அவர் ஒரு போதும் குறைத்துக் கொண்டதில்லை. மோடியின் அமைச்சரவையினை வெளியிலிருந்தே துண்டாடுவதில் அவர் எப்போதும் முனைப்புக் காட்ட தவறியதில்லை.

தனது வீட்டின் விசேட வைபவங்களுக்கு அமைச்சரவை உறுப்பினர்களை அழைப்பது வழமை. அவர்களும் முன்னாள்முதல்வர் என்று படையெடுப்பதும் வழமை. ஆனால்விருந்திற்கு அழைத்த கேசுபாய் படேல் அரசியலைதான் விருந்தாக பரிமாறிக்கொண்டதாக மோடியின் ஆதரவாளர்களது கொதிப்பு.


அதனால்தான் சுரேஸ் மேத்தா, கோவர்தன ஜடாபியா, நவீன்பட் ஆகியோர் உட்பட 60 அமைச்சரவை உறுப்பினர்கள் கேசுபாய் படேலின் பின்னால் இன்று அணி வகுத்திருக்கின்றனர் போலுள்ளது.


இவர்கள் அனைவரும் குஜராத் மாநில பாரதிய ஜனதா பொறுப்பாளரிடம் நரேந்திரமோடியை முதலமைச்சர் பதவியிலிருந்து விலக்குமாறு கடந்த வாரம் கோரிக்கை விடுத்தனர். ஆனால் நரேந்திர மோடியின் ஆதரவாளராக இருப்பதாலேயே அவர் மறுப்பு கூறிவிட்டதாக கேசுபாய் படேலின் ஆதரவாளர் கள் கருதுகின்றனர்.


இதனையடுத்து கேசுபாய் படேல் தலைமையில் இக்குழு டில்லி வரை தமது எதிர்ப்பலையினை சுமந்து சென்றிருக்கின்றது.முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பா.ஜ.க.துணைத் தலைவர் வெங்கையா நாயுடு பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் ஆகியோருடன் நரேந்திர மோடி விவகாரத்தை அலசியுள்ளனர். ஆந்திரா மாநில விவசாயிகள் போலவேதான் குஜராத் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள் என்றும் அதற்குள் மோடியை பதவி நீக்கம்செய்யவேண்டுமென்றும் இவர்கள் தம் எதிர்ப்பை முழுமையாக அறிவிப்புச் செய்துள்ளனர்.

இதேவேளை பா.ஜ.க. தலைவர்


அத்வானி


மோடி


மதன்லால் குரானா


வாஜ்பாய்

இவர்களை சந்திக்க மறுத் டார். மோடி மீது விசுவாசம் கொண்டதாலேயே அத்வானிமோடி எதிர்ப்பாளர்களை சந்திக்கவி லை என்றும் காரணம் கூறப்படுகின்றது.

அத்துடன் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்கள், மதன் லால்குரானா, சுரேஸ் மேத்தா, யஸ்வந் சின்கா, சத்துருகன் சின்கா,பாபு லால் மராட்டி,கன்சிராம் ராணா ஆகியோரும் நரேந்திர மோடிக்கு எதிராக குரல்கொடுப்பவர்களுடன் கைகோர்த்திருக்கின்றனர் என்றும் தெரியவந்திருக்கின்றது.

டில்லி வந்த மதன்லால் குரானா புதிதாக வெடிகுண்டொன்றையும் போட்டுவிட்டு சென்றிருக்கின்றார்.அத்வானி தலைமையில் நீடிப்பது கடினம் என்றும் விஸ்வ ஹிந்து பரிசட் அமைப்பிடம் கலந்தாலோசனை செய்தே முடிவு செய்யவுள்ளதாகவும் அதிர் வெடிகளை வீசியுள்ளார்.

இதனால்தான் தேசிய அளவில் பாரதியஜனதா பிளவுபட்டாலும் ஆச்சரியப்படமுடியாது எனும் கருத்து எழுந்திருக்கின்றதை காணக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் அத்வானி மீதான எதிர்ப்புக்கள் மோடியுடன் பின்னிப்பிணைந்ததல்ல.பாகிஸ்தான் சென்ற அத்வானி பல தவறுகளைச் செய்ததாக பாரதிய ஜனதா கட்சியும், விஸ்வ ஹிந்து அமைப்புக்களும் பட்டியலிட்டன.

ஜின்னாவின் நல்லடக்க தலத்திற்கு இதுவரை எந்த இந்தியரும் செல்லாத போது முதன்முதலாக அத்வானி சென்றமை.

ஜின்னா அரிய மாந்தர்களின் வரலாற்றை உருவாக்குபவர்களில்ஒருவர் என்று கூறியமை.

ஜின்னாவுக்கு மதசார்பற்றவர் எனும் மகுடம் சூட்டியமை.

இந்தியாவும் பாகிஸ்தானும் இருவேறு நாடுகள் தான் இதில் இனி எந்த மாற்றமும் இல்லை என்று பறை சாற்றியமை.

பாபர் மசூதி இடிப்பு தனது வாழ்நாளில் துயர நிகழ்ச்சி என்று கலங்கியமை.

இவ்வாறான அத்வானியின் கருத்துக்கள் விஸ்வஹிந்து பரிசட்டை மட்டுமல்ல பாரதிய ஜனதாவையும் உறைய வைத்தமை தெளிவு. ஆனால் பாரதிய ஜனதா கட்சியை போல விஸ்வ ஹிந்து பரிசட்டும்மௌனம் காக்கவில்லை.வெளிப்படையாக தமது எதிர்ப்பலைகளைக் காட்டியது. அத்வானி தலைமைப் பதவியை துறக்க வேண்டுமென்பதில் குறியாக இருந்தது. இன்றும் அந்த நிலை நீடிக்கின்றது.

இத்தகைய நிலையினைதான் மதன்லால் குரானா தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளார் போலுள்ளது.

ஏனெனில் பாரதிய ஜனதாவின் வளர்ச்சிக்கு விஸ்வஹிந்து பரிசட்டும் மிகக் கூடுதலான பங்களிப்பு செய்தமையினை உலகறியும். அதனால் விஸ்ஹிந்து பரிசட்டின் எதிர்ப்பினையும் தமது எதிர்ப்பினையும் “ஒன்றும் ஒன்றும்இரண்டு” எனக் கூட்டி பார்ப்பதில் மதன்லால் குரானா மிகுந்த அக்கறை கொண்டுள்ளமையினை தான் அவரது கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன எனலாம்.

அத்தோடு ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கத்தான் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்கள் ஒன்று கூடியுள்ளனர் எனலாம் நரேந்திர மோடியை பதவியிலிருந்து நீக்க, அத்வானி ஒருபோதும் உடன்படப் போவதில்லை என்பதை மூத்த தலைவர்கள் ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

எனவே நரேந்திரமோடியை பதவியிலிருந்து தூக்குமாறு எதிர்ப்பை உருவாக்கி அதற்கு அத்வானி மறுக்கும் போது, அத்வானியின் தலைமைப் பதவிக்கும் வேட்டு வைக்கவே பா.ஜ.க.மூத்த தலைவர்கள் கங்கணம் கட்டி இறங்கியுள்ளனர் என்றுதான் முடிவு கூறவேண்டியுள்ளது.

அத்வானியின் தலைமைக்கு முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி ஆகியோரும் எதிர்ப்பினை காட்டுபவர்களுடன் இணையக்கூடும் என்றும் எதிர்பார்க்க முடியும்.ஏனெனில் முரளி மனோகர் ஜோஷியும் மோடி எதிர்பாளர்க ன் ஆலோசனை நடத்தியுள் மை இதற்கு சான்றுபகரும்.


தேபோல், உமாபாரதியும், அ வானி, வெங்கையாநாயுடு யோருடன் மிகவும் தூரத்திலேயே ஒட்டியும் ஒட்டாமலும் தனது உறவை வைத்திருக்கின்றார். அத்வானி கட்சியிலிருந்து உமாபாரதியை தூக்கிவீசியவர். பின்னர் சேர்த்துத் கொண்டபோதும் உமாபாரதி அந்த வலியை மறந்திருக்கப் போவதில்லை எனவே உமாபாரதியும்மோடி அத்வானி எதிர்ப்பலையில் சங்கமிக்கக்கூடும் என்றும் நம்பலாம்.

எனவேதான், அத்வானி அவசர அவசரமாக குஜராத் பயணப்பட்டுள்ளார். அங்கே மோடி எதிர்ப்பாளர்களை சாந்தப்படுத்தும் நோக்கிலேயே அவரது பயணம் ஏற்பட்ட தாகக் கூறப்படுகின்றது.

ஆனால், அத்வானியின் குஜராத் பயணமானது கொதித்திருக்கும் மோடி எதிர்பாளர்களை குளிர்விக்குமா........ என்பதே சந்தேக வினாதான்.

அத்தோடு அத்வானியின் தலைமை நீடிக்குமா...... அல்லது அவரது தலைமைக்கும் ஆபத்து நேருமா...... என்தற்கு எதிர்காலம்தான் பதிலளிக்க வேண்டும்.

**அ.கலைவாணி**



குஜராத் கலவரம்

நானாவதி விசாரணை... (continued text) உட்கட்சி பூசல் ஏற்படுமளவுக்கு சம்பவங்கள் நடந்து முடிந்திருக்கின்றன.


இத்தகைய சம்பவங்களால் மிகவும் நொந்து நூலாகிப் போயிருப்பவர்கள் இருவர்தான்! ஒருவர் பாரதிய ஜனதா தலைவர் அத்வானி மற்றவர் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி.

ஏனெனில் இவர்களுக்கெதிரான அலைதான் இப்பொழுது குஜராத் முதல் தேசிய அளவில் வரை எழுந்திருக்கின்றது. இதனை இருவரும் சமாளிக்க முடியாமல் திண்டாடி கொண்டிருப்பதும் வெளிப்படைதான்!

இந்தவகையில குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடிக்கு எதிராக குஜராத்திலேயே சூறாவளி


[illegible]தராவில் எரிக்கப்பட்ட புகையிரதத்தைப் [illegible]வையிடும் வாஜ்பாய்.(2002ஆம்ஆண்டு)



# கவனிக்கப்பட வேண்டியவர்

பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், கல்வியுடன் இணைந்து போதிக்கப்படுவது விளையாட்டு. ஒரு நாணயத்திற்கு இருபக்கங்கள் போல் மாணவர்கள் வாழ்வில் கல்வியும், விளையாட்டும் ஒன்றியுள்ளது. அந்த வகையில் அண்மையில் 2005 ஆம் ஆண்டிற்கான வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் 400 மீற்றர் தடைதாண்டலினை 59.96 செக்கனில் ஓடி சாதனையை ஏற்படுத்தி முதலாமிடம் பெற்றுள்ளதுடன் திறந்த விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி 400 மீற்றர் தடை தாண்டல் (Hurdles) ஓட்டத்தில் 59.09 என்ற நேர அடிப்படையில் வெற்றியீட்டி வெண்கலப்பதக்கத்தை பெற்றுக்கொண்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் கிருபானந்தன் அகிலகிரியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இவர் கிருபானந்தன்-நாகேஸ்வரி தம்பதிகளின் மகன் ஆவார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கற்றுப் பின்னர் க.பொ.த சாதாரணம் வரை கொட்டகல ம.வியில் கற்று தொடர்ந்து க.பொ.தஉயர்தரத்தை மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கற்றுள்ளார். 2005 யூன் மாதம் வர்த்தகப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றினார்.

*** உங்களுக்கு தடகள விளையாட்டில் ஆர்வம் ஏற்படுவதற்கான காரணத்தை கூறமுடியுமா?**

இயல்பாகவே விளையாட்டில் ஆர்வம் உண்டு. ஆனால் நான் தடகள வீரனானது என்னைப் பொறுத்த வரையில் எதிர்பாராத சூழல் ஆகும். மாவட்ட மட்டத்தில் பாடசாலை விளையாட்டுப் போட்டியை பார்த்துக்கொண்டிருந்த என்னை எனது ஆசிரியர் ஒருவர் அஞ்சல் ஓட்டத்திற்கு குறித்த மாணவன் இல்லாத காரணத்தால் பங்குபற்றச் செய்தார். அவ் அஞ்சல் ஓட்டத்தில் ஆரம்ப ஓட்ட வீரனாக (First Button) செயற்பட வைத்தார். எமது அஞ்சல் ஓட்ட குழு முதல் இடத்தை பெற்றமை என்னை இத்தடகள விளையாட்டில் ஈடுபடத்தூண்டியது

*** இதன் பின்பு நீங்கள் ஈட்டிய வெற்றிகள் பற்றி தொடராகக் கூறமுடியுமா?**

2004 ஆம் ஆண்டு பாடசாலை மட்டத்தில் 100 மீற்றர், 200 மீற்றர், தடகள விளையாட்டில் முறையே இரண்டாம் இடம். நீளம் பாய்தலில் முதலாவது இடம் பெற்றுள்ளேன். கோட்டமட்டத்தில் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தலில் முறையே இரண்டாம் இடம் பெற்றுள்ளேன்.

தொடர்ந்து பயிற்சிகளைப் பெற்று 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் ஆகிய வற்றில் வலய மட்டத்தில் முறையே முதலாம் இடத்தைப் பெற்று சம்பியன் (Champion) ஆகியுள்ளேன்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட மட்டத்தில் 200 மீற்றர், நீளம் பாய்தல், 100 மீற்றர் தடகள நிகழ்வில் முறையே முதலாம் இடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடத்தைப் பெற்றேன்.

2004 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் 200 மீற்றர் ஓட்டத்தில் நான் காவது இடம் கிடைத்தது. 2004 தேசிய மட்டத்திற்கு 200 மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்ற தெரிவானேன். வெற்றி வாய்ப்பு கிடைக்கவில்லை.

இம்முறை 2005 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்டத்தில் 400 மீற்றர் தடை தாண்டல் (Hurdles) ஓட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று இதற்கு முன்பு இருந்த வெற்றி இலக்கை (Record) முறியடித்துள்ளேன். புது சாதனையை (Record) 59.96 ஏற்படுத்தியுள்ளேன்.

*** விளையாட்டு உங்களது கல்வியைப் பாதிக்கவில்லையா?**

விளையாட்டு என்பது மாணவர்களுக்குரிய ஒரு இணைப்பாடம் எனவே விளையாட்டு எனக்கு மட்டுமல்ல எவருக்குமே தடையாக இருக்கமாட்டாது.

*** தடகள செயற்பாட்டிற்கு பெற்றோரின் பங்களிப்பு பற்றிக் கூறமுடியுமா?**

எனது தந்தையார் வெளிநாட்டில் இருப்பதால் ஊக்குவிப்பு வார்த்தை மட்டும் கிடைக்கிறது. ஆனால் அம்மா என் அருகில் இருந்து ஊக்குவிப்பு,ஊட்டமான உணவு தந்து எனது தடகள செயற்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளார்.

*** உங்கள் எதிர்கால இலக்கு என்ன?**

முதலில் இம்முறை தேசிய தடகள விளையாட்டில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு பதக்கத்தைப் பெற்று பின்பு சர்வதேச அளவில் பங்குபற்றி வெற்றியீட்டுவதே.

*** உங்கள் பகுதியில் உங்களை வளர்த்துக்கொள்ள கூடிய சூழல் உள்ளதா?**

குறிப்பிடும்படி எந்த அடிப்படை வசதியும் இல்லை. நான் தெரிவு செய்து பயிற்சி பெறும் தடகள விளையாட்டு தடைதாண்டல் ஓட்டப் பயிற்சிக்கான "கேடில்ஸ்" (Hurdles) எனது கல்லூரியில் இருப்பது இரண்டு மட்டும். அதில் ஒன்று பழுது. எனது பயிற்சிக்கு குறைந்தது பத்து " கேடில்ஸ்" ((Hurdles) தேவை. நான் இந்த இரண்டு "கேடில்ஸ்" (Hurdles) கொண்டு மிகுந்த சிரமத்துடன் பயிற்சி பெறுகிறேன். அத்துடன் தரமான விளையாட்டு திடல் ((play ground) இல்லாதமை அடுத்த மிகப்பெரியகுறைபாடு.

மேலும் சொல்வதானால் மெலுவூட்டல் உபகரணங்கள் இன்மையும் எமது உடல் தடகள விளையாட்டுக்கு தயார் செய்வதில் இவ் உபகரணங்கள் முக்கிய பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வசதி எமக்கு இல்லை.

**உமது தடகள வாழ்விற்கு நீர் வாழும் சமூகம் எந்தளவிற்கு அனுசரணையாக உள்ளது?**

நான் வாழும் சமூகத்தைக் குறைகூற விரும்பவில்லை. ஆனால் பிற இடங்களுடன் பார்க்கும் போது விளையாட்டுக்கு எமது சமூகம் வழங்கும் ஊக்குவிப்பு, உதவிகள், உற்சாகப்படுத்தல் என்பது மிகக் குறைவு. அது என் போன்ற வீரர்களுக்கு மனவருத்தம். அவர்கள் விளையாட்டு வீரர்கள் ஆகிய எமது செயற்பாடு, வெற்றிகளை கருத்தூன்றி பார்ப்பது இல்லை. ஆனால் சர்வதேச அளவில் நடக்கும் கிரிக்கெட் (Cricket) ஒலிம்பிக் (Olimpic)போன்றவற்றை பார்ப்பதிலும், அது பற்றி உரையாடுவதிலும் உற்சாகத்துடன் உள்ளார்கள்.

